# 10ம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் ஜிஎஸ்டி

## சிறு தொழில்களை முடக்கிய பாதிப்புகளும் மீண்டு வர முன் வைக்கும் கோரிக்கைகளும்

**திருப்பூர், ஜூலை 1:** இந்தியப் பொருளாதார வரலாற்றில் மிகப்பெரிய வரிச் சீர்திருத்தமாகக் கூறப்பட்டு கொண்டுவரப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி எனப்படும் ஜிஎஸ்டி வரி முறை அமல்படுத்தப்பட்டு 9 ஆண்டுகள் நிறைவடைந்து, இன்று 10வது ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது. அறிமுகப்படுத்தப்பட்டபோது நாடு முழுவதும் இதன் மீது கடுமையான எதிர்ப்புகள் எழுந்தன. தொழில் நகரமான திருப்பூரில் இதன் மீது கடுமையான எதிர்ப்புகள் முன் வைக்கப்பட்டது. போராட்டங்களும் நடந்தது. ஆனால், காலப்போக்கில் ஒட்டுமொத்த வர்த்தக உலகமும், பொதுமக்களும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட இந்த வரி நடைமுறைக்குப் பழகிவிட்டனர். ஆனால் அறிமுகப்படுத்தப்பட்டபோது கிடைக்காத தளர்வுகள், அமல்படுத்தியதில் காட்டிய வேகம் காரணமாக திருப்பூரில் முதுகெலும்பாக இருந்த சிறு குறு நடுத்தர பின்னலாடை உற்பத்தி மற்றும் அதனை சார்ந்த ஜாப் ஒர்க் நிறுவனங்கள் ஏராளமானவை தொழில் நடத்த முடியாமல் மூடப்பட்டது.

கடந்த 2017ம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட போது திருப்பூர் பல்வேறு கடுமையான சிக்கல்களையும் வாழ்வாதாரச் சரிவுகளையும் சந்தித்தது. தொழில் துறையினரின் தொடர் கோரிக்கைகள் மற்றும் போராட்டங்கள் காரணமாக, கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் வரிக்கட்டமைப்பில் சில முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டன. குறிப்பாக, நடுத்தர மக்கள் பயன்படுத்தும் ரூ.2,500க்கு உட்பட்ட ஆடைகளுக்கான வரி 5 சதவீதமாகவும், நெசவு, பிரிண்டிங், தையல் உள்ளிட்ட ஜாப் ஒர்க் சேவைகளுக்கான வரி 5 சதவீதமாகவும் குறைக்கப்பட்டது. இருப்பினும், இந்த புதிய நடைமுறையிலும் திருப்பூரின் குறு மற்றும் சிறு நிறுவனங்கள் களஅளவில் புதிய நடைமுறைச் சிக்கல்களைச் சந்தித்து வருகின்றன.

### லாபம் இழக்கும் சிறு தொழில்

திருப்பூரில் கட்டிங், பிரிண்டிங், தையல் எனப் பல்வேறு ஜாப் ஒர்க் நிறுவனங்கள் மூலமே ஒரு பின்னலாடை முழுமை பெறுகிறது. முன்பு சாதாரண சரக்குச் சீட்டு மூலம் எளிதாக ஒரு பகுதியில் இருந்து மற்றொரு பகுதிக்கு நகர்த்தப்பட்ட துணிகளுக்கு, தற்போது ஒவ்வொரு கட்டத்திலும் இ-வே பில் மற்றும் ஆன்லைன் கணக்குகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக சிறு தொழில் உரிமையாளர்களும் தணிக்கையாளர்கள் நியமனம், ஆவணப்பராமரிப்பு செலவுகள் என தங்கள் லாபத்தை இழக்கின்றனர்.

முக்கியமாக, பின்னலாடைத் தயாரிப்பிற்குத் தேவைப்படும் சாயங்கள், பட்டன்கள், ஜிப்பர்கள் மற்றும் பேக்கிங் பொருட்களுக்கு 18 சதவீத ஜிஎஸ்டி வசூலிக்கப்படுகிறது. ஆனால், இறுதித் தயாரிப்பான ஆடைக்கு 5 சதவீதம் மட்டுமே வரி என்பதால், தலைகீழ் வரிவிகித முரண்பாடு ஏற்பட்டு, சிறு நிறுவனங்களின் முதலீட்டுப் பணம் அரசிடம் முடங்கிக் கிடக்கிறது. அதேபோல், ஜாப் ஒர்க் கட்டணங்களுக்கான வரி குறைக்கப்பட்டாலும், கிராமப்புறங்களில் இயங்கும் சிறு நிறுவனங்கள் மாதாந்திர டிஜிட்டல் பில்லிங் மற்றும் ஆவணப் பராமரிப்பைச் செய்ய முடியாமல் தணிக்கை நெருக்கடிகளையும், ஆன்லைன் அபராதங்களையும் எதிர்கொள்கின்றனர்.

திருப்பூரில் உள்நாட்டுச் சந்தையை மட்டுமே நம்பியிருக்கும் 90 சதவீதத்திற்கும் அதிகமான குறு நிறுவனங்கள் இந்த புதிய ஜிஎஸ்டி பண்ட் தொகைகள் கைக்கு வர தாமதமாவதால் கடுமையான பணப்புழக்கத் தட்டுப்பாட்டைச் சந்தித்து வருகின்றன. 9 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், நடைமுறைகளை மேலும் எளிமைப்படுத்தி, தேங்கிக் கிடக்கும் ரீபண்ட் தொகைகளை ஒற்றைச் சாளர முறையில் விரைவாக விடுவித்தால் மட்டுமே, ஜி.எஸ்.டி-யால் இழந்த பொருளாதாரத்தை திருப்பூர் ஓரளவாது மீட்டெடுக்க முடியும் என்கின்றனர் சிறு குறு தொழில்துறையினர்.

## போராட்டத்தில் மயங்கி விழுந்த பெண் தூய்மை பணியாளர்கள்

▶ திருப்பூர் கலெக்டர் அலுவலக வளாகத்தில் போராட்டத்தின் போது மயங்கி விழுந்த பெண்.

### வீடியோ வைரல்

**திருப்பூர், ஜூலை 1:** திருப்பூர் மாவட்டம் உடுமலை, பல்லடம், அவிநாசி, தாராபுரம் உள்ளிட்ட அரசு மருத்துவமனைகளில் தனியார் ஒப்பந்த நிறுவனத்தின் கீழ் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்கள் வேலை செய்து வருகின்றனர். இவர்களுக்கு மாவட்ட கலெக்டர் அறிவித்த குறைந்தபட்ச தினசரி ஊதியம் (மாநகராட்சிக்கு ரூ.761, நகராட்சிக்கு ரூ.646) வழங்கப்படுவதில்லை என்றும், சம்பளப் பிடித்தம் செய்யப்படுவதாகவும் கூறி கடந்த 5 நாட்களாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் மதியம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் பேச்சுவார்த்தை நடத்துவதாகக் கூறி தொழிலாளர்கள் வரவழைக்கப்பட்டனர். ஆனால், மாலை வரை தனியார் ஒப்பந்த நிறுவனத்தின் சார்பில் யாரும் வராததால் ஆத்திரமடைந்த தொழிலாளர்கள் சாலை மறியலில் ஈடுபடப் போவதாக எச்சரித்தனர்.

இதனைத் தொடர்ந்து, மாவட்ட வருவாய் அலுவலர் கார்த்திகேயன் முன்னிலையில் இருதரப்பு பேச்சுவார்த்தை நடந்தது. அப்போது, சுமூகத் தீர்வு காண 15 நாட்கள் கால அவகாசம் வேண்டும் என தனியார் நிறுவனம் தரப்பில் கோரப்பட்டதால், அதிகாரிகள் அதற்கு அனுமதி அளித்தனர்.

இந்த நிலையில், மதியம் முதல் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டதால் கல்லூரி சாலையைச் சேர்ந்த ஜோதி (45) மற்றும் விஜயபுரம் பகுதியைச் சேர்ந்த சித்ரா (38) ஆகிய இருவரும் திடீரென மயங்கி விழுந்தனர். இதில், ஜோதி என்பவர் மாவட்ட வருவாய் அலுவலர் அறையின் வராண்டாவில் பேச்சுவார்த்தை நடந்தபோதே திடீரென மயங்கி கீழே விழுந்தார். இதில் தலையில் பலத்த காயமடைந்த அவருக்குச் திடீரென வலிப்பு ஏற்பட்டது. இதனால் அதிர்ச்சியடைந்த சக தொழிலாளர்கள், உடனடியாக அவருக்கு முதலுதவி அளித்து, 108 ஆம்புலன்ஸ் மூலம் திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

## கவுண்டையன் வலசு கிராமத்தில்

# டாஸ்மாக் மதுக்கடை அகற்ற கோரிக்கை

**தாராபுரம், ஜூலை 1:** தாராபுரத்தை அடுத்த மூலனூர் ஊராட்சி ஒன்றியம் கவுண்டையன் வலசு கிராமப் பகுதியில் அரசு டாஸ்மாக் மதுக்கடை செயல்பட்டு வருகிறது.

இதனால் பொதுமக்கள், பெண்கள், மாணவர்கள் பல்வேறு இன்னல்களை சந்திந்து வருகின்றனர். எனவே மதுக்கடை உடனே அகற்ற வேண்டும் என்று கோரி நேற்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு தாலுகா செயலாளர் கனகராஜ் தலைமையில் அப்பகுதி மக்கள் தாராபுரம் வட்டாட்சியர் ராமலிங்கத்திடம் கோரிக்கை மனுவை அளித்தனர்.


**ஹீரோ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்**

HeroHousing Finance

தொடர்பு முகவரி: ஏ-6, மூன்றாவது தளம், செக்டார்-4, நொய்டா-201301.
பதிவு அலுவலகம்: 09, சமுதாய மையம், பசந்த் லேக், வசந்த் விஹார், புதுடெல்லி-110057
தொலைபேசி: 011 49267000, கட்டணமில்லா எண்: 1800 212 8800, மின்னஞ்சல்: customer.care@herohfl.com
இணையதளம்: www.herohousingfinance.com | CIN: U65192DL2016PLC30148

**கோரிக்கை அறிவிப்பு**

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 ("விதிகள்") இன் விதி 3 உடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 ("சட்டம்") இன் பிரிவு 13(2) கீழ்

இவ்வாறிருக்க கீழே கையொப்பமிட்டவர் ஹீரோ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் (எச்எச்எல்) அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால் சட்டத்தின் கீழ் மேலும் விதிகளின் விதி 3 உடன் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி சட்டத்தின் பிரிவு 13(2) கீழ் ஏற்கெனவே கீழ்க்காணும் தேதியிட்ட விரிவான கோரிக்கை அறிவிப்புகள் வழங்கி, இதன்கீழ் பட்டியலிடப்பட்ட கடன்தாரர்(கள்)/ உப-கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) (அனைவரும் தனியாக அல்லது கூட்டாக "கடமைதாரர்கள்" ஆக குறிப்பிடப்படுவர்)/ சட்டப்பூர்வ வாரிசு(கள்)/ சட்டப்பூர்வ பிரதிநிதி(கள்) ஆகியோர், கீழே கொடுக்கப்பட்ட விவரங்களின்படி, சம்பந்தப்பட்ட கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிட்டத் தொகைகளை, சம்பந்தப்பட்ட அறிவிப்புத் தேதிகளிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரியிருந்தார். மேற்கூறிய அறிவிப்புகளின் பிரதிகள் ஒப்புகையுடன் கூடிய பதிவஞ்சல் A.D. மூலம் வழங்கப்பட்டுள்ளன. மேலும் கீழே கையொப்பமிட்டவரிடம் உள்ளன. மேலும் மேற்கூறிய கடமைதாரர்(கள்)/ சட்டப்பூர்வ வாரிசு(கள்)/ சட்டப்பூர்வ பிரதிநிதி(கள்), அவர்கள் விரும்பினால், அனைத்து வேலை நாட்களிலும் வழக்கமான அலுவலக நேரங்களில் கீழே கையொப்பமிட்டவரிடமிருந்து சம்பந்தப்பட்ட நகல்பிரதியை பெற்றுக் கொள்ளலாம்.

மேற்கூறியதன் தொடர்பாக, மேற்கூறிய கடமைதாரர்(கள்) / சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி(கள்), அவர்தம் சம்பந்தப்பட்டப் பெயர்களுக்கு எதிரே இங்கே கீழே குறிப்பிட்டத் தொகையை, கீழே நிரல் (D) இல் குறிப்பிட்ட சம்பந்தப்பட்டத் தேதிகளிலிருந்து பணப்பட்டுவாடா மேலும் / அல்லது பணமாக்கும் தேதி வரை, கடன் ஒப்பந்தம் மற்றும் பிற ஆவணங்கள்/பத்திரங்கள், மேற்கூறிய கடமைதாரர்(கள்) மூலம் நிறைவேற்றப்பட்டது ஏதேனுமிருந்தால் அவற்றுடன், கீழே விவரிக்கப்பட்டவாறு மேற்கொண்டு வட்டியுடன் சேர்த்து, சம்பந்தப்பட்ட அறிவிப்பு/கள் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் ஹீரோ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் வசம் செலுத்துமாறு, இதன்மூலம் மீண்டும் ஒருமுறை அறிவிப்பு வழங்கப்படுகிறது. கடனை திருப்பிச் செலுத்துவதற்கான கடனீட்டாக, பின்வரும் கடனீட்டுச் சொத்து(கள்) முறையே மேற்கூறிய கடமைதாரர்(கள்) மூலம் ஹீரோ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் வசம் அடமானம் வைக்கப்பட்டுள்ளன.

| கடன் கணக்கு எண் | கடமைதாரர்(கள்)/சட்டப்பூர்வ வாரிசு(கள்)/ சட்டப்பூர்வ பிரதிநிதி(கள்) பெயர் | கீழ்க்காணும் தேதியன்று மொத்த நிலுவைத்தொகை (ரூ) * | கோரிக்கை அறிவிப்பு நாள் | செயல்பட்டா சொத்து நாள் |
|---|---|---|---|---|
| HHFCOILAP 24000055296 | செல்வகுமார் A, ப்ரியா S | 11.06.2026 தேதியன்று ரூ.35,77,995/- | 24-06-2026 | 04-06-2026 |

கடனீட்டுச் சொத்துகள்/அசையாச் சொத்துகள்/அடமான சொத்துகள் விவரம்: திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வட்டம், திருப்பூர் இணை எண்.1, முத்தணம்பாளையம் கிராமம், சர்வே எண்.350/1, துணைப் பிரிவின்படி சர்வே எண்.350/1A, துணைப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.475/95 இன்படி டிபின் கார்டன் என்றறியப்படும் 54 சென்ட்கள் பரப்பளவு உள்ள சொத்தின் எல்லைகள்: வடக்கில்: பிறருக்குச் சொந்தமான நிலம், தெற்கில்: 30 அடி அகல கிழக்கு மேற்கு சாலை, கிழக்கில்: பிறருக்குச் சொந்தமான சொத்து, மேற்கில்: 55 அடி அகல வடக்கு–தெற்கு சாலை. அளவீடு: கிழக்கு–மேற்காக வடக்கு பக்கம் – 37 ; கிழக்கு–மேற்காக தெற்கு பக்கம்– 35; வடக்கு தெற்காக கிழக்கு பக்கம்– 21, வடக்கு தெற்காக மேற்கு பக்கம் – 28 ½; மொத்தப் பரப்பளவு தோராயமாக 891 சதுர அடி. அனைத்துப் பயன்பாட்டு உரிமைகள் மற்றும் பாதையுடன் கூடிய இந்த சொத்து 891 சதுர அடி பரப்பளவு உள்ள நிலத்தில் கட்டிடம், அமைப்புகள், கதவுகள், ஜன்னல்கள், மின்சார இணைப்புகள், தண்ணீர் இணைப்புகள், கால்வாய் மற்றும் அனைத்து பிற வசதிகள் இணைக்கப்பட்டுள்ளன. இந்த சொத்து திருப்பூர் இணை எல்லைக்குள் அமைந்துள்ளது. அனைத்து வரிகள், கட்டணங்கள் மற்றும் ஆகியவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் செலுத்த வேண்டிய பிற கட்டணங்கள் அதற்கேற்ப செலுத்தப்பட வேண்டும்.

*மேற்குறிப்பிட்ட தேதி சம்பந்தப்பட்ட கோரிக்கை அறிவிப்பில் இன்னும் குறிப்பிட்டு தெரிவிக்கப்பட்டவாறான விகிதத்தில் மேற்கொண்டு வட்டி, கூடுதல் வட்டியுடன், பணப்பட்டுவாடா மற்றும்/அல்லது பணமாக்கும் தேதி வரை ஏற்பட்ட சாதாரண செலவினங்கள், செலவுகள், கட்டணங்கள், ஏனையபலற்றுடன் மேற்கூறிய கடமைதாரர்(கள்), மேற்கூறியவாறு ஹீரோ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடுக்கு பணப்பட்டுவாடா செய்யத் தவறினால், ஹீரோ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் பொருந்தும் விதிகளின் கீழ், செலவுகள் மற்றும் விளைவுகள் வகையில் முற்றிலும் மேற்கூறிய கடமைதாரர்(கள்)/ சட்டப்பூர்வ வாரிசு(கள்)/ சட்டப்பூர்வ பிரதிநிதி(கள்) இன் முழு பொறுப்பில் உள்ள மேற்கூறிய கடனீட்டுச் சொத்து(கள்) / அசையாச் சொத்து(களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளும்.

மேற்கூறிய கடமைதாரர்(கள்)/ சட்டப்பூர்வ வாரிசு(கள்)/ சட்டப்பூர்வ பிரதிநிதி(கள்) ஹீரோ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் முன்கூட்டிய எழுத்துப்பூர்வ ஒப்புதலின்றி விற்பனை, குத்தகை அல்லது பிற வழிமிங் மேற்கூறிய கடனீட்டுச் சொத்து(கள்) / அசையாச் சொத்தை பெயர் மாற்றம் செய்வதற்கு மேற்கூறிய சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டிருக்கிறார்கள். சட்டம் அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் விதிமுறைகளை மீறும் அல்லது மிறத் தூண்டும் நபர் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டவாறு சிறைதண்டனை மேலும்/அல்லது அபராதம் விதிக்கப்படுவதற்கு உட்படுவார்.

நாள்: 01.07.2026
இடம்: திருப்பூர்

ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி,
ஹீரோ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடுக்காக


## நிட்மா சாலையில்

# குப்பைகள் எரிப்பதால் புகை மூட்டம்

### வாகன ஓட்டிகள் அவதி

▶ திருப்பூர் நொய்யல் ஆற்றங்கரையோரம் உள்ள நிட்மா ரோடு பகுதியில் குப்பைகளுக்கு தீ வைக்கப்பட்டதால் அப்பகுதியில் புகைமூட்டம் ஏற்பட்டது.

**திருப்பூர், ஜூலை 1:** திருப்பூர் தெற்கு மின் மயானம் அடுத்த நிட்மா சாலைப்பகுதி பிரதான போக்குவரத்து பாதையாக இருந்து வருகிறது. சமீப வாரங்களாக அப்பகுதியில் ஓரங்களில் குப்பைகள் பெருமளவு குவித்து வைக்கப்படுகிறது. இதனை மாநகராட்சி தூய்மை பணியாளர்கள் அப்புறப்படுத்தாததன் காரணமாக அவ்வப்போது தீ வைத்து எரிக்கப்படுகிறது. இதனால் சாலை முழுவதும் அடர்ந்த நச்சுப்புகை சூழ்ந்து எதிரே வரும் வாகனங்கள் கூடத் தெரியாத அளவிற்குப் புகை மூட்டம் ஏற்படுகிறது. இந்தத் திடீர் புகை மூட்டத்தால் நிட்மா சாலையில் பயணிக்கும் இருசக்கர வாகன ஓட்டிகளுக்குக் கண் எரிச்சல், மூச்சுத்திணறல் ஏற்படுவதுடன், விபத்துகள் ஏற்படும் அபாயமும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. குறிப்பாக, அதிகாலை நேரத்தில் வேலைக்குச் செல்லும் பனியன் தொழிலாளர்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகள் இந்த நச்சுப் புகையால் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். எனவே, மாநகராட்சி மற்றும் மாவட்ட நிர்வாகம் உடனடியாக இப்பகுதியில் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தி, குப்பைகளைக் கொட்டித் தீ வைப்பவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்துகின்றனர்.

## வலிப்பு நோய் ஏற்பட்டு முதியவர் சாவு

**திருப்பூர், ஜூலை 1:** திருப்பூர் தாராபுரம் சாலை வாய்க்கால் மேடு பகுதியில் ஆண் சடலமாக கிடப்பதாக நல்லூர் போலீசார் கிடைத்தது. இதனை தொடர்ந்து போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று உடலை கைப்பற்றி விசாரித்தனர். அதில் அவர் காங்கயம் அடுத்த சிஎஸ்ஐ காலனி பகுதியை சேர்ந்த சண்முகம் (47) என்பது தெரிய வந்தது. மேலும் சண்முகம் திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் வலிப்பு நோய்க்கு

சிகிச்சையில் இருந்த போது தப்பி சென்று வாய்க்கால் மேடு பகுதியில் மது அருந்தியதாக கூறப்படுகிறது. அப்போது மீண்டும் வலிப்பு ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என கூறப்படுகிறது. இந்த சம்பவம் தொடர்பாக நல்லூர் போலீசார் வழக்கு பதிந்து சண்முகம் உடலை பிரேதபரிசோதனைக்காக திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

# பெண்ணிடம் 10 பவுன் நகை பறித்தவர் கைது

### தோழியும் சிக்கினார்

**திருப்பூர், ஜூலை 1:** திருப்பூர், அணைப்புதூரை அடுத்த நேரு நகரை சேர்ந்தவர் முத்துசாமி. இவரது மனைவி வாசுகி (23). இந்நிலையில் கடந்த 24ம் தேதி மாலை வாசுகி வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். அப்போது அந்த வழியாக பைக்கில் வந்த மர்மநபர் ஒருவர் வாசுகியிடம் வழி கேட்பது போல் நடத்து, அவர் கழுத்தில் அணிந்திருந்த 10 பவுன் தங்கசெயினை பறித்துக்கொண்டு கண்ணிமைக்கும் நேரத்தில் பறந்தார்.

இது குறித்து வாசுகி அளித்த புகாரின் பேரில் திருமுருகன்பூண்டி போலீசார் வழக்குப்பதிந்து சிசிடிவி கேமரா காட்சிகள் அடிப்படையில் பத்மாவதிபுரத்தை சேர்ந்த லூயிஸ் பிரான்சிஸ் சேவியர் (45) என்பவரை பிடித்து விசாரித்தனர். அதில் வாசுகியின் வீட்டில் வாடகைக்கு வசிக்கும் நந்தினி என்பவர் கொடுத்த தகவல் படி, லூயிஸ் பிரான்சிஸ் சேவியர் வாசுகியிடம் நகை பறித்தது தெரியந்தது. தொடர்ந்து போலீசார் லூயிஸ் பிரான்சிஸ் சேவியர், நந்தினி (35) ஆகியோரை கைது செய்தனர்.

## கோவையில் விரைவில்

# சர்வதேச வரி இல்லா ஒப்பந்தம் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம்

### தேசிய விசைத்தறி மேம்பாடு, ஏற்றுமதி ஊக்குவிப்பு கவுன்சில் அறிவிப்பு

**பல்லடம், ஜூலை 1:** கோவையில் விரைவில் சர்வதேச வரி இல்லா ஒப்பந்தம் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெறும் என்று தேசிய விசைத்தறி மேம்பாடு மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு கவுன்சில் தலைவர் கரைப்புதூர் சக்திவேல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் பல்லடத்தில் செய்தியாளர்களிடம் நேற்று கூறியதாவது:

இந்திய அரசின் ஜவுளி அமைச்சகத்தால் 1995ம் ஆண்டு தேசிய விசைத்தறி மேம்பாடு மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு கவுன்சில் நிறுவப்பட்டது. விசைத்தறி தொழிலை மேம்படுத்துவதையும், விசைத்தறி பொருட்கள் மற்றும் துணிகளை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதை ஊக்குவிப்பதையும் இது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு சர்வதேச அளவில் பல நாடுகளுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களை செய்துள்ளது. இதன் பயன் நாடு முழுவதும் உள்ள ஜவுளி உற்பத்தியாளர்கள் அனைவரையும் சென்றடைய வேண்டும். என்பதற்காக தேசிய விசைத்தறி மேம்பாடு மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு கவுன்சில் தீவிரமாக உள்ளது.

வர்த்தகத் துறையின் தடையற்ற வர்த்தக ஒப்பந்த கிளஸ்டர் விழிப்புணர்வு நிகழ்ச்சி என்பது, ஏற்றுமதியாளர்கள் மற்றும் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், தொழில்முனைவோருக்கு, பிற நாடுகளுடன் ஒன்றிய அரசு செய்துள்ள தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களின் பலன்களைப் (வரிச் சலுகைகள் மற்றும் சந்தை வாய்ப்புகள்) கொண்டு சேர்க்கும் ஒரு விழிப்புணர்வுத் திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் மூலம் கிடைக்கும் வரிச் சலுகைகள், கட்டணக் குறைப்புகள் மற்றும் அதற்கான சான்றிதழ் நடைமுறைகள் குறித்து தொழில்முனைவோருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

புதிய சந்தை வாய்ப்பு உள்ள ஆஸ்திரேலியா, ஐக்கிய அரபு அமீரகம், பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளின் சந்தைகளில் நம் நாட்டுப் பொருட்களை எவ்வாறு எளிதாக மற்றும் மலிவாக கொண்டு சென்று விற்பனை செய்யலாம் என்பது குறித்து விளக்கப்படுகிறது.

ஏற்றுமதி சார்ந்த தொழில்கள் அதிகம் நிறைந்த பகுதிகள் மற்றும் சிறு நிறுவனங்களுக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்படுகிறது. கடந்த ஜூன் 29ம் தேதி அகமதாபாதில் முதல் தடையற்ற வர்த்தக ஒப்பந்த கிளஸ்டர் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் அகமதாபாத் வெளிநாட்டு வர்த்தக இணை இயக்குநர் ராகுல்சிங் பங்கேற்று சிறப்புரையாற்றினார். இதில் ஜவுளி உற்பத்தி துறையினர் கலந்து கொண்டு பயன் அடைந்தனர்.

மேலும், இதே போன்று தேசிய விசைத்தறி மேம்பாடு மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு கவுன்சில் சார்பில் நாடு முழுவதும் வர்த்தகத் துறையின் தடையற்ற வர்த்தக ஒப்பந்த கிளஸ்டர் விழிப்புணர்வு நிகழ்ச்சி விரைவில் நடத்தப்படவுள்ளது. தமிழகத்தில் கோவை, இச்சல்கரஞ்சி, மும்பை (மகாராஷ்டிரா) உள்ளிட்ட முக்கிய ஜவுளி நெசவு மையங்களில் நடத்தப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## விஜய் பிறந்த நாளையொட்டி

# தொடர் கால்பந்து போட்டி

**உடுமலை, ஜூலை 1:** உடுமலை நகர தவெக சார்பில் முதல்வர் ஜோசப் விஜய்யின் 52வது பிறந்த நாளை முன்னிட்டு, மாபெரும் தொடர் கால்பந்து போட்டி உடுமலை கல்பனா ரோட்டில் உள்ள நேதாஜி மைதானத்தில் நடந்தது.

திருப்பூர் தெற்கு மாவட்ட தவெக செயலாளர் திருமலை தலைமையில் வழக்கறிஞர் கண்ணன் ஏற்பாட்டில் போட்டி நடந்தது. இப்போட்டியில் வெற்றி பெற்ற கால்பந்தாட்ட அணியினருக்கு மாவட்ட பொருளாளர் பிரகாஷ் மற்றும் வக்கீல் கண்ணன் ஆகியோர் பரிசு வழங்கினர். நிகழ்ச்சியில் மாவட்ட, நகர, ஒன்றிய அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கூட்டுறவு வார விழா தொடக்கம்

**திருப்பூர், ஜூலை 1:** திருப்பூர் மாவட்ட கூட்டுறவுத் துறை சார்பில் வருகிற 6ம் தேதி வரை கூட்டுறவு வார விழா நடக்கிறது. இதனை முன்னிட்டு திருப்பூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில், மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் பிரபு தேசிய கொடியேற்றினார். தொடர்ந்து உறுதிமொழி ஏற்கப்பட்டது. இதில், சரக துணைப்பதிவாளர்கள், வேளாண்மை உற்பத்தியாளர்கள், கூட்டுறவு சங்க துணைப்பதிவாளர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.


**எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்**

equitas Small Finance Bank

பதிவு அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை, தமிழ்நாடு - 600002

**சுவாதீன அறிவிப்பு**

2002 கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள், விதி 8 (1)
(அசையா சொத்துக்காக)

கம்பெனிகளின் சட்டம் 1956-ன் கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனமான M/s.எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் மற்றும் கம்பெனிகளின் சட்டம் 2013 பிரிவு 2 (20) மற்றும் பேங்கிங் கம்பெனி, வங்கி ஒழுங்குமுறை சட்டம், 1949 பிரிவு 5 (C)-ன் கீழ் பதிவு அலுவலகம் 4வது தளம், பேஸ்-II, ஸ்பென்சர் பிளாசா, 769, அண்ணாசாலை, சென்னை - 600 002 மற்றும் இந்தியா முழுவதும் பல்வேறு இடங்களில் கிளை அலுவலகம் கொண்டுள்ள கீழே கையொப்பமிட்டுள்ளவர் அங்கீகாரம் பெற்ற அதிகாரியாக இருக்கின்றபடியால் 2002-ம் வருடத்திய கடனீட்டு சொத்துக்களை ஒராக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கச்சட்டம் பிரிவு 13(12)-ன் மற்றும் விதி 3-ன் கீழ் கடன்தாரர் / இணைகடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் **1.திரு.V.சூரியபிரகாஷ், 2.திரு.T.வெள்ளியங்கிரி, 4.திருமதி.V.அமராவதி, 4.திருமதி.லோஷ்னி குணசேகரன் (கடன் எண். 700008301339 & 700008310789)** ஆகியோர்களுக்கு **27/03/2026** தேதியிட்ட கேட்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டு அதில் குறிப்பிட்டுள்ள **26/03/2026 அன்று வரை உள்ள கடன் பாக்கித் தொகையான ரூ.23,51,395/- (ரூபாய் இருபத்து மூன்று லட்சத்து ஐம்பத்து ஓராயிரத்து முன்னூற்று தொண்ணூற்று ஐந்து மட்டும்)** மேலும் ஒப்பந்தத்தின் படி தொடர்புடைய வட்டி, அபராத வட்டி, கட்டணங்கள், செலவுகள் மற்றும் பல சேர்த்து இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரப்பட்டிருந்தது.

கடன்தாரர் / இணைகடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் கடன் தொகையை திருப்பி செலுத்த தவறியதால் குறிப்பாக கடன்தாரர் / இணைகடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் மற்றும் பொதுவாக பொது மக்களுக்கும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிப்பது கீழே கையொப்பமிட்டுள்ளவர் மேற்குறிப்பிட்ட சட்டம், பிரிவு 13 (4) விதி 8-ன் கீழ் த